# அர்மகெதோன் யுத்தம்





சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~

**(இது தீர்க்கதரிசி பிரன்ஹாம் பேசிய செய்திகளிலிருந்து, '**அர்மகெதோன் யுத்தம்**' என்ற தலைப்பில் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிய, கீழே குறிப்பிட்டுள்ள செய்திகளை முழுமையாக வாசிக்கவும்.)**

~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~ ~

---

# அர்மகெதோன் யுத்தம்

---

**சபை காலம் முடிவடைந்து அந்தகாரம் சூழத்தொடங்கி, மணவாட்டி அழைக்கப்பட்டு விட்டிருந்தால், நாம் ஏற்கனவே உபத்திரவ காலத்தில் பிரவேசித்து விட்டோமா?**

இல்லை, இல்லை, இல்லை, நீங்கள்... இந்த கேள்விக்கு விடையளிக்க சற்று அதிக நேரம் இருந்தால் நலமாயிருக்கும். பாருங்கள். பாருங்கள்?

மணவாட்டி சபையை விட்டு எடுக்கப் படும் போது, சபைகாலம் முடிவடையும்.

லவோதிக்கேயா குழப்பத்துக்குள் செல்லும்; **மணவாட்டி மகிமைக்குச் செல்கி றாள். புத்தியில்லாத கன்னிகைகளின் மேல் 3½ ஆண்டுகள் உபத்திரவ காலம் வந்திறங்கும்.**

**இஸ்ரவேல் அப்பொழுது தன் தீர்க்க தரிசனத்தைப் பெற்றுக் கொண்டிருப்பாள்; பிறகு இஸ்ரவேலுக்கு உபத்திரவ காலம் தொடங்குகிறது; அதன் பிறகு அர்மகெதோன் யுத்தம் உண்டாகி, அது எல்லாவற்றையும் அழித்து போடும்.**

**பிறகு மணவாட்டி மணவாளனுடன் ஆயிரம் வருட அரசாட்சிக்காக திரும்பி வருகிறாள்; அதன்பிறகு வெள்ளை சிங்கா சன நியாயத்தீர்ப்பு வருகிறது; அதன்பிறகு புதிய வானமும் புதிய பூமியும் உண்டாகி, புதிய நகரம் பரலோகத்தை விட்டு தேவ**

**னிடத்திலிருந்து இறங்கி வருகிறது. அப்பொழுது காலமும் நித்தியமும் ஒன்றாக இணைகிறது.**

**64-08-30E கேள்விகளும் பதில்களும் COD #20**

~~~~~

89 கவனியுங்கள், அவர்கள் இப்பொழுது ஒன்றாக இணைத்துகொண்டிருக்கின்றனர். நீங்கள், "சகோதரன் பிரான்ஹாம் அது உண்மையா?" என்று கேட்கலாம்.

**அவர்கள் அர்மகெதோன் யுத்தத்திற்கு வந்து கொண்டிருக்கின்றனர்; அவர்கள் சரியாக அதைத்தான் செய்வார்கள். புரிகின்றதா? அவர்கள் இப்பொழுது அதற்காகவே இணைந்து கொண்டிருக்கிறார்கள்.**

அதற்காகத்தான் நாம் ஐ.நா சபை மற்றுமுள்ள ஒவ்வொரு காரியத்தையும் நாம் பெற்றுள்ளோம். மேற்கத்திய உலகம்
~~~~~

கிழக்கத்திய உலகத்துக்கு விரோதமாக, கம்யூனிஸம் போன்றவைகளுக்கு விரோத மாக, அவையாவும் ஒன்றிணைந்து கொண் டிருக்கின்றன.

சபைகள் ஒன்றிணைந்து கொண்டிருக் கின்றன.

ஒவ்வொரு காரியமும் ஒன்றிணை வதுபோல் தென்படுகிறது. இணைதல், தங்களை ஒன்றோடொன்று இணைத்துக் கொள்வதை நாம் காண்கிறோம்.

90 தேசங்கள் ஒன்றாக இணையும் இந்த அடையாளங்களோடு, தேசங்களுக் கான அடையாளங்களோடு, நாம் இங்கே உலகில் பல இடங்களில் பூமியதிர்ச்சிகள் உண்டாவதைக் காண்கிறோம், வெவ்வேறு காரியங்கள் ஒன்றிணைந்து, உலகத்தை ஒன்று சேர்த்து, ஜனங்களை ஒன்று சேர்த்து, சபைகளை ஒன்று சேர்த்து, இந்த எல்லாக் காரியங்களையும் ஒன்று சேர்க்கிறது.

இந்த எல்லா இணைப்புகளும் நடந்து கொண்டிருக்கையில், மற்றொரு இணைப் பும் நடந்து கொண்டிருக்கிறது. ஆமென். அதைத்தான் நான் இப்பொழுது உங்க ளிடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

91 தேவன் தம்முடைய மணவாட் டியை ஒன்று சேர்த்துக் கொண்டிருக்கிறார்.

அவள் கிழக்கிலும், மேற்கிலும், வடக் கிலும், தெற்கிலுமிருந்து வந்து ஒன்று சேரு கின்றாள்.

ஒரு இணையும் நேரம் உண்டு, அது இப்பொழுது நடந்து கொண்டிருக்கிறது.

அவள் எதற்காக இணைந்து கொண் டிருக்கிறாள்? எடுத்துக் கொள்ளப்படுதலுக் காக. ஆமென்!

தேவன் அவளை ஆயத்தப்படுத்திக் கொண்டு வருகிறார். ஆம் ஐயா, இணை

தல்! அவள் எதனோடு இணைந்து கொண்டிருக்கிறாள்? வார்த்தையோடு!

“வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை."

அவள் கர்த்தர் உரைக்கிறதாவது என்பதுடன் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறாள்.

எந்த ஸ்தாபனம் அல்லது வேறு யார் என்னக் கூறினாலும் அதைப் பொருட்படுத்துகிறதில்லை. அவள் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிறாள்.

அவள் ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறாள். ஏன்? அவள் மணவாட்டியாயிருக்கிறாள். அது உண்மை. அவள் தன்னை தன்னுடைய மணவாளனோடு இணைத்துக் கொண்டிருக்கிறார், பாருங்கள், மணவாளன் வார்த்தையாயிருக்கிறார். "ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை

தேவனிடத்திலிருந்து, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அந்த வார்த்தை மாம்ச மாகி நமக்குள்ளே வாசம்பண்ணினார்."

92 சபையும் மணவாட்டியும் வார்த் தையும் ஒன்றாகிக் கொண்டு வந்து முடிவில் வார்த்தையே மணவாளனின் கிரியைகளை செய்துகொண்டிருக்கிறது. ஆமென்! உங்களால் அதைக் காண முடி கிறதா? ஒரு இணைதல்! இனி ஒருபோதும், “சபையை சேர்ந்து கொள்ளுதல்" என்றல்ல; இதைக் குறித்து அதிகமாக என்றல்ல, ஆனால் ஒவ்வொரு காரியத்திலிருந்தும் விலகி ஓடி இயேசு கிறிஸ்துவண்டை கட்டப்படுங்கள். புரிகிறதா? இது இணை யும் நேரமாயுள்ளது. தேவன், தமது மண வாட்டியை மறுபடியும் கொண்டு வந்து ஒன்றாக இணைக்கிறார்; சரியாக தம்மு டைய வாக்குத்தத்தத்தின் வார்த்தைகளை இணைக்கிறார்.

## 63-08-18 இணையும் நேரமும் அடையாளமும்

~~~~~

77. ஆகட்டும். நாம் அநேகப் பெரிய சண்டைகளை, ஆவிக்குரிய சண்டை களைச் செய்திருக்கிறோம். அநேகப் பெரிய வெற்றியின் நாட்களை சபை யானது பெற்றிருக்கிறது. நான் சபையை, கிறிஸ்துவின் சரீரத்தைக் குறிக்கிறேன். இப்போது, நான் ஸ்தாபன ஒழுங்குகளைக் குறித்துப் பேசுகிறேன், விசுவாசிகளான சரீரமானது, காலங்கள் தோறும் தொடர்ந்து பல வெற்றியின் நாட்களைக் கண்டிருக் கிறது. நாம் பல்வேறு யுத்தங்களையும், யுத்தங்களைப் பற்றிய செய்திகளையும், V - நாட்களையும், V - நாட்களையும், மேலும் V - நாட்களையும், சந்தித்தோம்.

**இது முடிவிலே அர்மகெதோனில் நடக்கப் போகிற மகா யுத்தத்தில் வந்து சேரும். ஆக, அதுவே கடைசியானதாக இருக்கும். அந்த**
~~~~~

**மேன்மையான ஆயிரங்கால அரசாட்சிக்கு சிறிது முன்னதாக அவள் அர்மகெதோன் யுத்தத்திற்கு வரும்போது, அது எல்லாவற்றையும் தீர்த்து வைக்கும். அர்மகெதோன் பூமியைச் சுத்தப்படுத்துவதாக இருக்கும்!**

இந்த பூமியானது அணுக்களின் வீசுதலினாலும், மேலும் எரிமலைச் சாம்பல் போன்றவைகளாலும் தன்னை மறுபடியும் தூய்மைப்படுத்திக் கொண்டு, பூமியின் மேல் ஊறிப் போன மனித இரத்தத்தையும், பாவத்தையும் பூமியானது தனக்கு அடியிலே மூழ்கடிக்கும் போது மறுபடியுமாக எரிமலைகள் வெடித்துச் சிதறி அந்த மேன்மையான ஆயிரங்கால அரசாட்சிக்காக இந்த பூமியை புதுப்பித்து சுத்தப் படுத்தும். ஒரு ஜனமானது இங்கே வாழும் படியாக அவர் தம்முடைய சபையை அந்த சமயத்தில் சுத்தப்படுத்துகிறார். ஆமென்!

நான் உங்களுக்கு சொல்கிறேன் பாருங்கள், இது எனக்கு பிடித்தமாயிருக்கிறது. ஆம் ஐயா! அதோ ஒரு காலம் வருகிறது அப்போது இது பிரமாதமாக இருக்கும்!

## 63-04-21 வெற்றியின் நாள்

~~~~~

333. "என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்'' என்று இயேசு கூறினார். அவர், "நீ என்னை விசுவாசித்தால், மரித்தாலும் பிழைப் பாய்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்'' என்றார். மேலும் அவர், "என்னை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. அவனைக் கடைசி நாளில் எழுப்புவேன்” என்றார். அது அவர் வாக்களித்த வேத வாக்கியமாகும்.
~~~~~

334. **சாத்தான் பூமியின் நான்கு முனைகளிலுமுள்ள பிராடெஸ்டெண்டுகளையும் கத்தோலிக்கர்களையும் ஒன்று கூட்டி, அர்மகெதோன் யுத்தத்திற்கென்று படைதிரட்டி வருகிறான்.** சரி!

335. ஆகவே, இயேசுவும் தேவனுடைய வார்த்தையால் நிலைநிறுத்தப்பட்ட உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுடன் பரலோகத்திலிருந்து இறங்கி வருகிறார்.

336. நான் முன்பு கூறியதுபோல், தேவன் உங்களுடன் பேசி உங்களை அனுப்புவாரெனில், அவருடைய வார்த்தையை அவர் ஆதரிக்கக் கடமைப்பட்டுள்ளார். பாருங்கள்? நீங்கள் பரலோகத்தின் ராஜ்யப் பிரதி நிதி (Ambassador)யாக இருப்பீர்களானால், பரலோகம் முழுவதுமே உங்களை ஆதரிக்கும். பரலோகம்

தேவனுடைய வார்த்தையைக் கொண் டிருக்கிறது. ஊ-ஊம்.

337. இப்பொழுது கவனியுங்கள். அவர் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்க ளுடன் வந்து, தேவனுடைய வார்த்தை உண்மையென நிரூபிக்கிறார்.

**63-03-21 நான்காம் முத்திரை**

~~~~~

220. பிறகு, நான் உங்களையெல்லாம் அப்போது என்னோடு சேர்ந்து திரும்பக் கூறும்படி வைத்தேன். அதென்னவெனில், "உங்கள் கண்களை ருஷியாவின் மேல் வையுங்கள்'' என்பது தான். உங்களுக்கு அது நினைவிருக்கிறதா? "ருஷியாவின் மேல் உங்கள் கண்களை வையுங்கள்'' அவைகள் யாவும் கம்யூனிசத்தில் போய் முடிவுறும். அதன்பிறகு, அதுவெல்லாம் கத்தோலிக்க மார்க்கத்தில் போய் சங்கம
~~~~~

மாகும். கடைசி காலத்தில் அதுவெல்லாம் கத்தோலிக்க கொள்கையில் போய் சங்கமமாகிவிடும் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். அது சரியாக அப்படித்தான் நடக்கும். கிறிஸ்துதாமே வருகையில், அது அர்மகெதோன் யுத்தக் களத்தில் இருக்கும்.

221. ஆனால் இந்த மூன்று தீர்க்க தரிசிகள் அல்லது இந்த மூன்ற ரை வருடங்கள், அது வெளிப்படுத்தின விசேஷம் 11:3-இல் உள்ளது, அதை நீங்கள் அநேக தடவைகள் வாசித்திருக்கி றீர்கள். "என்னுடைய இரண்டு சாட்சி களும், ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் தீர்க்கதரிசனம் சொல்லும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுப்பேன்." ஆயிரத்து இருநூற்றறுபது நாட்கள் என்பது எத்தனை ஆண்டுகள். மூன்றரை ஆண்டுகள். எழுப தாவது வாரத்தில் மத்தியிலே அவர்கள்

தெருக்களிலே கொல்லப்படுவார்கள். ஆகவே, தானியேலின் எழுபது வாரங்கள் எங்கே உள்ளன என்பதை கவனித்தீர்களா? நாம் எந்த சமயத்தில் வாழ்ந்து கொண் டிருக்கிறோம் என்பதை நீங்கள் கண்டீர் களா? நாம் முடிவான நேரத்தில் இருக்கி றோம், எனது இனிய நண் பர்களே, நாம் முடிவான நேரத்தில் இருக்கிறோம். இந்த நாட்கள்.....

## 61-08-06 தானியேலின் எழுபது வாரங்கள் #3

~~~~~

இந்த சந்ததியில் அவரைக் குறித்து வெட்கப்படாதிருங்கள். இது பாவம் நிறைந்ததும், திகில் நிறைந்ததும், விபச் சாரமும் அழுகிய புண்கள் நிறைந்த சந்ததி யுமாயுள்ளது. இதுவே பூமியில் இருக்கப் போகும் கடைசி சந்ததி. ஒழுக்கமுள்ள அனைத்துமே ஒழுக்கமற்றதாகிவிட்டது. நாட்டின் அரசியல் அழுக்காயுள்ளது! நாடு
~~~~~

கள் உடைகின்றன, ஆப்பிரிக்காவிலுள்ள காடுகளிலும் கூட மிருக வேட்டைக்கு வருவோர், எல்விஸ் பிரஸ்லி, பாட் பூன் போன்றவர் பாடும் “ராக் அண்டுரோல்”, 'டிவிஸ்ட்' இசையைக் கேட்பதற்கென அதிக சக்தி வாய்ந்த வானொலிப் பெட்டி களை அவர்களுடன் கூட கொண்டு வரு கின்றனர். இவர்கள் தலையசைத்து ஆடு வதை அங்குள்ள சுதேசிகள் வியப்புடன் நோக்குகின்றனர். அவர்கள் பாட் பூன், எல்விஸ் பிரஸ்லி, ரிக்கி நெல்சன் போன்று அமெரிக்கர் அல்ல. அவர்கள் அப்படிப் பட்ட யூதாஸ்கள் அல்ல. ஆனால் அவர் கள்... பாருங்கள், அது ஒரு ஆவி. அது அமெரிக்காவில் மாத்திரமல்ல, உலகெங் கும் பரவியுள்ளது. அது முடிவில் அவர் களை அர்மகெதோன் யுத்தத்திற்கு கொண்டு சேர்க்கும். அவர்கள் எந்த நாட்டை சேர்ந்தவர்களாயிருப்பினும்- ஆப்பிரிக்கா, இந்தியா போன்ற நாடு

களைச் சேர்ந்தவர்களும் கூட- அவர்கள் அதே விதமாக நடந்து கொள்கின்றனர். இந்த ஆபாசமான செயல் ஒரே ஒரு மனிதனால் தொடங்கப்பட்டு, இப்பொழுது உலகம் பூராவும் பரம்பியுள்ளது.

**65-07-11 வெட்கப்படுதல்**

~~~~~

310. **இப்பொழுது அவர்கள் ஒன்று கூடி, எல்லா வண்ணங்களும் கலந்த குதிரையின் மீது அர்மகெதோன் பலப்பரீட்சைக்குப் புறப் படுகின்றனர்.** வெள்ளைக் குதிரை, சிவப் பான குதிரை, கறுப்புக் குதிரை. இந்த மூன்றும் வித்தியாசமானவை - ஆனால் அசுத்த ஆவியின் வல்லமையால் கட்டப் பட்டுள்ள, அரசியல், மத வல்லமைகளான அந்திக்கிறிஸ்து வாக இருக்கின்றது. அவன் இம் மூன்றும் ஒருங்கே பெற்று அவன் மங்கின நிறம் கொண்ட வெளிறிய தோற்றங்கொண்ட குதிரையின் மேல்
~~~~~

சவாரி செய்கிறான். சரி. இப்பொழுது கவனியுங்கள். அவன் எதின்மேல் சவாரி செய்கிறான் என்பதைக் கவனியுங்கள். அவன் கறுப்பு, சிகப்பு, வெள்ளை வர்ணங்கள் மூன்றும் கலந்த மங்கின நிறமுள்ள சாம்பல் நிறமுள்ள குதிரையின் மேல் சவாரி செய்து, வானத்தின் கீழுள்ள எல்லா தேசங்களிலுமிருந்து தன் பிரஜை களை அந்த யுத்தத்திற்கென்று கூட்டிச் சேர்க்கிறான். தானியேல் சொப்பனத்தின் அர்த்தத்தை விளக்கி, இரும்பு ரோமா புரியின் எல்லா ராஜ்யங்களிலும் பரவு வதை அறிவிக்கவில்லையா? இதோ அவர் களெல்லாரும் ஒன்று சேர்ந்து வருகின் றனர்.

## 63-03-21 நான்காம் முத்திரை

~~~~~

307. கவனியுங்கள். "அவர்களைப் பூமி யின் நான்கு முனைகளிலிருந்தும் அர்ம
~~~~~

கெதோன் யுத்தத்திற்குக் கூட்டி சேர்க் கின்றனர்'' என்று வேதம் கூறுகின்றது. அதை நான் எழுதி வைத்திருக்கிறேன். ஆனால் அதை படிக்கப் போவதில்லை. அந்த வேதவாக்கியத்தை நினைவுப்படுத்தி உங்களிடம் கூறுகின்றேன். “தேவனாகிய கர்த்தருடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்கு அவர்களைக் கூட்டி சேர்க் கின்றனர்.'' கவனியுங்கள்! எல்லா வண் ணங்களும் கலந்த உலகப் பிரகாரமான, மங்கிய நிறம் கொண்ட வெளிறிய தோற்றங்கொண்ட குதிரை. சற்று சிந்தித்து பாருங்கள், அது ஒரு தீங்கான காரியம் என்பதை நீங்கள் அறிவீர்கள். **அவன் அவர்களைப் ''பூமியின் நான்கு முனைக ளிலிருந்தும் கூட்டி சேர்ப்பதை” கவனியுங்கள். பலப்பரீட்சைக்காக அவர்கள் கூடுகின்றனர். அந்த யுத்தம் (பலப்பரீட்சை) ''அர்மகெ தோனில்'' நடக்கும் என்று வேதம் எடுத் துரைக்கிறது. பாருங்கள்?**

## 63-03-21 நான்காம் முத்திரை

~~~~~~

284. இப்பொழுது தேவன் என்ன செய்து கொண்டிருக்கிறார்? அவர் முன் குறித்த அநேக வித்துக்கள் காலங்கள் தோறும் உண்டாயிருந்தன. அவர் கடைசி காலத்தில், "ஏவாளே, வேறொரு குழந்தை யைப் பிரசவிப்பாயாக" என்று சொல்ல மாட்டார். அவர் என்னைக் கூப்பிடுவார் (வ்யூ). நான் பதிலளிப்பேன். அவ்வளவு தான். அதுதான். அது தான் கருத்து. கடைசி நபர் உட்பிரவேசித்த பிறகு, எல்லாம் முடிவடையும்.

285. **இப்பொழுது, யுத்தம் பரலோகத்தில் ஆரம்பித்தது. அது பூமியில் அர்மகெ தோன் யுத்தத்தில் முடிவடையும்.**

286. அது இப்பொழுது வெளிப்படு வதைக் கவனியுங்கள். நாம் அதை
~~~~~~

ஒருவேளை வெளிப்படுத்தலாம். நாம் இப்பொழுது அதைச் செய்ய கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக. அது வெளிப் படுவதை கவனி யுங்கள்.

## 63-03-21 நான்காம் முத்திரை

~~~~~

278. கவனியுங்கள்? இவையெல்லாம் எந்த சம்பவத்தில் முடிவடையப் போகின் றது? நமக்கு இன்னும் பன்னிரெண்டு, பதினான்கு நிமிடங்கள் உள்ளன என்று நான் ஊகிக்கிறேன். இவையெல்லாம் எந்த சந்தர்ப்பத்தில் முடியவடையப் போகின் றது? அது என்ன? ஆரம்பத்தில் என்ன சம்பவித்ததோ, அதுவே முடிவில் சம்பவிக் கும். அது பரலோகத்தில் யுத்தமாகத் தொடங்கினது. அவ்விதமே அது கடைசி கால யுத்தத்திற்கு வந்து கொண்டிருக் கின்றது...
~~~~~

279. பரலோகத்தில் முதலாவதாக ஒரு போர் தொடங்கினது, லூஸிபர் (Lucifer) அப்பொழுது பூமிக்குத் தள்ளப்பட்டான். அவன் ஏதேனை அப்பொழுது அசுசிப் படுத்தினான். அன்று முதல் அவன் எல்லாவற்றையுமே மாசுபடுத்திக் கொண்டு வருகிறான். **அப்பொழுது பரலோகத்தில் யுத்தம் உண்டானது. கடைசி காலத்தில் அர்மகெதோன் (Armegeddon) யுத்தம் பூமியில் மூண்டு அது முடிவடையும். உங்களுக்கு அது தெரியுமா? முதலாவதாக பரிசுத்த பரலோகத்தில் யுத்தம் மூண்டது. மிகாவேலும் அவனைச் சார்ந்த தூதர்களும் லூசிபரையும், அவன் தூதர்களையும் முறியடித்து அவர்களைக் கீழே தள்ளினார்கள். அவன் ஏதேனில் விழுந்த அன்று முதல், உலகத்தில் போர் செய்துகொண்டேயிருக்கிறான்.**

**63-03-21 நான்காம் முத்திரை**

~~~~~
~~~~~

116.இப்பொழுது, கடைசி நாட்களில், அவர் கத்தோலிக் கத்தையும், ரோமா னிஸத்தையும், மற்றும் அந்த எல்லா காரியங்களையும் கண்ணியில் சிக்க வைப் பார் என்று வேதம் முன்னுரைக்கிறது, மேலும் அவர்கள் - கம்யூனிஸமும், அவர்கள் எல்லாருமே அங்கேயிருக்கும் மெகிதோ (Megiddo) பள்ளத்தாக்குகளில் ஒன்றாகக் கூடுவார்கள், அங்கே இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளத்தின் ஒரு பகுதி (horse's bit) மட்டுமாக - குதிரை களின் கடிவாளம் மட்டுமாக பெருகிவரும் அளவுக்கு அவர்கள் மத்தியில் ஈவிரக்க மின்றி அவ்வளவு படுகொலை நடக்கும், அது அந்த அளவுக்கு இருக்கும். பாருங் கள், அது வெளிப்படுத்(தல்) புத்தகத்தில் உள்ளது... அது... இருக்கும். **ஆனால் பரலோகப் பிதாவுக்கு நன்றி, நாம் (அப்போது) இங்கே இருப்போம் என்று நான் நினைக் கவில்லை. அவருடைய கிருபையினால், நாம்**

**இங்கே இருக்க மாட்டோம். நாம் அப்போது மகிமையில் இருப்போம். பாருங்கள்? அது சரியாக அந்த இரண்டு தீர்க்கதரிசி கள் அர்மகெதோன் யுத்தத்தில் தீர்க்கதரிசனம் உரைப்பதற்கு பிறகு சம்பவிக்கும்.** அப்போது தான் இந்த-இந்த புறஜாதி தேசங்கள் மிகவும் ஒழுக்கக்கேடான (பழி பாவத் துக்கு பயப்படாத) ஒரு நிலையை அடைந்து, அப்படியே தொடர்ந்து செய்து கொண்டிருப்பார்கள், சபைகளின் கூட்ட மைப்பும், இந்த எல்லாமுமே ஒன்றி ணையும். தேவன் சபையை, தெரிந்து கொள்ளப்பட்ட சபையை யாவற் றையும் விட்டு வீட்டிற்கு எடுத்துக் கொள்வார். உறங்கிக் கொண்டிருக்கும் எல்லா கன்னி கைகளுமே காத்துக் கொண் டிருப்பார்கள்...

இப்பொழுது, அவர்கள் எல்லாரும் அங்கே (யுத்தத்தில்) சந்திக்கும் போது, அங்கே அந்த கடிவாளத்தின் ஒரு

பகுதி (bridle's bit) உறங்கிக் கொண்டிருக்கும் கன்னிகைகளை விட்டும், அந்நாளில் பின்னால் இருக்கும் அவர்கள் எல்லாரை விட்டும், கம்யூனிஸத்தை விட்டும் வெளியே வரும்; சென்ற நாட்களில் அவர் செய்ததைப் போன்று, தேவன் அங்கே அந்தப் பள்ளத்தாக்கில் அவர்களோடு வழக்காடுவார் என்று அவர் கூறியிருக்கிறார், அது உங்களுக்குத் தெரியும். அங்கே தான் அது குதிரைகளின் கடிவாளங்கள் மட்டுமாக பாய்ந்து வரும்.

## 61-08-08 உன் வீட்டார்

~ ~ ~ ~ ~

83. இங்கே சற்று ஒரு நிமிட நேரம் நிறுத்திக்கொள்கிறேன். சந்தேகத்தின் நிழல் சிறிதும் இன்றி நீங்கள் அறிந்துகொள்ளத் தக்கதாக, நான் வெறுமனே ஒரு வசனத்தைக் கொண்டு மட்டும் உங்களோடு பேச மாட்டேன். வேத வாக்கியங்கள் முழுவ

தையும் எடுத்துக்கொண்டு, அவற்றிலிருந்து ஒரு வாரமாகிய ஏழு நாட்கள் என்பது ஏழு ஆண்டுகளுக்கு சமம் என்பதை நான் வேத்திலிருந்து உங்களுக்கு நிருபித்துக் காண்பிக்க முடியும் வெளிப்படுத்தின விசேஷம் 11ம் அதிகாரம் 3ம்வசனத்தை எடுத்துக்கொண்டு அதிலிருந்து நான் உங்களுக்கு இப்பொழுது தான் காண்பித்திருக்கிறேன். **அத்தீர்க்கதரிசிகள் ஆயிரத்து இருநூற்று அறுபது நாட்கள் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள். அதுதானே யூதர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாரங்களில் உள்ள கடைசி வாரத்தின் பாதி வாரமாகும். அதற்குப் பிறகு அவர்கள் வெட்டப்பட்டு, பிறகு அர்மகெதோன் துவங்குகிறது.** ஆகவே காரியம் அவ்வாறிருக்கிறபடியால், அங்கே ஒரு மாதத்திற்கு சரியாக முப்பது நாட்கள் உள்ளன என்பதை மீண்டும் பார்க்கிறோம். அப்படியென்றால், ஒரு மாதத்தில் முப்பதும், ஒரு மாதத்தில் முப்பத்தியொன்றும்,

இன்னொரு மாதத்தில் இருபத்தியெட்டு நாட்களுமாக இருக்காது; ஒவ்வொரு மாதத்திற்கும் சரியாக முப்பது நாட்கள் வீதம்தான் இருக்கிறது.

**61-08-06 தானியேலின் எழுபது வாரங்கள் #3**

~~~~~

41. இப்பொழுது, எசேக்கியேல் 9வது அதிகாரத்தில், எவ்வாறு எருசலேமில் நடந்த காரியம் குறிப்பிட்டுக் காட்டப் பட்டுள்ளது என்பதைப் பாருங்கள். இப்பொழுது, நாம் வெளிப்படுத்தின விசே ஷத்திற்கு வருவோம். இப்பொழுது, பென்சில்களை வைத்திருக்கிறவர்கள் இதை எழுதி வைத்துக் கொள்ள விரும்பு கிறேன். நீங்கள் வெளிப்படுத்தின விசேஷம் 14ம் அதிகாரம் 6வது வசனம் தொடங்கி 12வது வசனம் முடிய எழுதி வைத்துக்கொள்ள விரும்புகிறேன். அது கடைசியான மூன்று தூதர்களாக இருக்கி
~~~~~

றது, மூன்று தூதர்கள், கடைசியான ஏழு தூதர்களுக்குப் பிறகு, மூன்று விசேஷமான தூதர்கள் அங்கே புறப்பட்டு வருகிறார்கள், நீங்கள் அதைக் கவனித் தீர்களா? மேலும் இப்பொழுது, நீங்கள் அதைக் கவனிக்க வேண்டுமென்று விரும்புகிறேன், அந்தக் கடைசியான மூன்று தூதர்கள்... முதலாம் தூதன் (அது வெளிப்படுத்தின விசேஷம் 14ம் அதிகாரம் 6 முதல் 12 வசனங்களில் உள்ளது), முதலாம் தூதன் சுவிசேஷ எக்காளத்தை ஊதி, முழு உலகத்திற்கும் அறிவிக்கத்தக்கதாக நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்தான். இரண்டாம் தூதன் ஒருவிதத்தில் ஒரு பரிசுத்த சுவிசே ஷத்தை அறிவித்தான் (புரிகிறதா?), ஏனென்றால் சபையானது வேசித்தனம் பண்ணியிருந்ததாக அவன் கூறினான். மூன்றாம் தூதனோ மிருகத்தின் முத்தி ரைக்குத் தப்பித்துக்கொள்ளும்படி முழங்கி னான்.

கவனியுங்கள். சீர்திருத்தத்தில் முதலாம் தூதனாகிய லூத்தர் சுவிசேஷத்தைப் பிரசங் கித்தார். இரண்டாம் தூதனா கிய வெஸ்லி பரிசுத்தமாக்கப்படுதலை பிரசங்கம் பண் ணினார். வேசித்தனம், அவர் சபையைக் கண்டித்துத் திருத்தினார். ஆனால் மூன்றா வது செய்தி பெந்தெகோஸ்தே செய்தியாக இருக்க வேண்டும், அந்த உண்மையான செய்தியாளன் மிருகத்தின் முத்திரைக்குத் தப்பித்துக்கொள்ளும்படியாக அவர்களை எச்சரித்து, ‘மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறவன் எவனோ, அவன், ஜனங்கள் மேல் ஊற்றப்படும், தேவனுடைய கோபாக்கினையாகிய பாத் திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிர கோபத்தைக் குடிப்பான்’ என்று கூறிக்கொண்டிருந்தான். அதுதான் இன்றைக்குள்ள இதே செய்தி யாகும், மூன்றாம் தூதன், மூன்றாவது செய்தி, இதுவே கடைசி செய்தி. நீதிமா


னாக்கப் படுதலாகிய லூத்தரின் செய்தியும், பரிசுத்தமாக்கப்படுதலாகிய வெஸ்லியின் செய்தியும், தேவனுடைய முத்திரையை உடைய பெந்தெகோஸ்தே செய்தியும்: மிருகத்தின் முத்திரைக்குத் தப்பித்துக் கொள்ளுங்கள்; பாபிலோனின் அந்தப் பெரிய மதிற்சுவர்களை விட்டு வெளியே வந்து, தேவனுடைய இராஜ்யத்திற்குள் முத்திரை போடப்படுங்கள்.

42. கவனியுங்கள், அதற்கும் தொட்டடுத்த வசனமாகிய 12 முதல் 13வது வசனத்தில், ‘கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள்’ என்று (கூறப்பட்டுள்ளது). அடுத்ததாக நடப்பது என்ன? அர்மகெதோன். அந்த மூன்றாவது தூதனின் செய்திக்குப் பிறகு, சபையானது போய் விடுகிறது. நாம் அன்றொரு நாள் அந்த தூதர்களைக் குறித்தும், அந்தக் கடைசியான ஏழு தூதர்களைக் குறித்தும், அந்தத்

தூதனுடைய செய்தியைக் குறித்தும் சபையில் பிரசங்கித்துக் கொண்டிருந்தோம். இந்த விசேஷமான அபிஷேகமானது அந்த மூன்று காலங்களிலிருந்து வருகிறது, அந்த மூன்று கடைசி தூதர்களிலிருந்து வருகிறது.

**61-02-17 மிருகத்தின் முத்திரையும் தேவனுடைய முத்திரையும் #2**

~~~~~
~~~~~


அர்மகெதோன் யுத்தம்